# SOCIAL CHALLENGES FACED BY ESATE PEOPLE DURING THE COVID 19 PERIOD: A SOCIOLOGICAL STUDY BASED ON ST. MARGRET ESTATE

A.Dhevayani [1]& AR.Asraj Ahamed[2]

*1,2 Deprtment of Sciology, Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka*

asrajrazaak97@gmail.com

**Abstract**

Covid- 19 has had a massive impact on all factors of human life. This is becoming a huge challenge to the lives of all people. Although many researches have been published in this regard. but no research has been published on the challenges faced by the estate people During covid 19 period .This research has been carried out in a way that completes the research gap. The aim of this study is to identify the challenges faced by the estate people during the covid 19 Period. .It is explored mainly through three topics.These are the economic challenges, social challenges and psychological challenges faced by the estate people during the covid 19 period. For this purpose, quantitative method was used, under the st Margret estate was selected as a sample. In the purposive sampling technique, data was collected from st Margret estate people who faced problems on covid 19 period. observation method and unstructured interviews and Focus groups discussion were used as data collecting techniques. Data were analyzed based on public feedback and data. The results showed that social problems, economic problems, psychological problems faced by st Margret people during covid 19 period. This research identified the economical prolems are lots jobs, Barries of products' marketing system, Disgrease products. Futher, social problems are lots of Social intecrationship and Lack of education. Finally, this reseaech find out psychological problems are Stress, Fear, Anxity and Stress.

**Key Words:** *Covid-19, Chllenges, Esate people*

## 1. ஆய்வு அறிமுகம்

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸானது 2020 ஆம் ஆண்டு மார்ச் நடுப்பகுதியில் உலகம் முழுவதும் பரவலடைந்தது. இதனைத் தொடர்ந்து, மார்ச் 11 ஆம் திகதி அன்று உலகளாவிய தொற்றுநோய் என கொவிட் - 19 இனை உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்தது (இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2019). 2020 ஆகஸ்ட் 31 ஆம் நிலவரப்படி, 216 நாடுகளில் கொவிட் - 19 வைரஸின் தாக்கம் காரணமாக 24, 854, 140 மக்கள் பாதிப்படைந்துள்ளனர். இதில் 838, 924 பேர் உயிரிழந்துள்ளனர். உலகளாவிய ரீதியில் அமெரிக்காவில் 5, 855, 521 பேர் கொவிட் - 19 தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் 838, 924 பேர் உயிரிழந்துள்ளனர். உலகில் கொவிட் 19 இனால் பாதிக்கப்பட்ட நாடுகளில் அமெரிக்கா முதலாவது இடத்தில் காணப்படுகின்றது (கூர்மை,2020 ). கொவிட் - 19 தொற்றுநோய் காரணமாக உலக நாடுகள் சமூக, பொருளாதார, கலாசார மட்டத்தில் பல சவால்களினை எதிர்கொண்டுள்ளன. இது வரையிலும் இந்த நிலையானது தொடர்ந்துக் கொண்டே வருகின்றது. கொவிட் - 19 காரணமாக உலகளவில் 81% வேலையாட்கள்

பாதிப்படைந்துள்ளனர். சர்வதேச தொழிலாளர் அமைப்பு அறிமுகப்படுத்திய மாதிரியின் அடிப்படையில் பார்க்கும்போது, உலகெங்கிலும் உள்ள தொழிலாளர்கள் வேலை செய்யும் நேரம் 10.5% இனால் குறைவடைந்துள்ளது (கூர்மை, 2020).

சர்வதேச தொழிலாளர் அமைப்பு (International Labour Organization), உணவு மற்றும் விவசாய அமைப்பு (The food and agriculture Organization), விவசாயத்திற்கான சர்வதேச நிதியம்; (International Fund for Agriculture) மற்றும் உலக சுகாதார அமைப்பு (World Health Organizations) என்பன இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையின் போது, ஆரோக்கியம் மற்றும் நமது உணவு முறைகளில் பாரிய தாக்கத்தினை கொவிட் - 19 ஏற்படுத்தியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பொருளாதாரம், சமூக ரீதியாக பாரிய சீர்குலைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் தீவிர வறுமையில் விழும் அபாயத்தில் உள்ளனர். தற்போது கிட்டத்தட்ட 690 மில்லியன் மக்கள் தீவிர வறுமையில் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது இனி வரும் காலங்களில் 132 மில்லியனாக அதிகரிக்குமென மதிப்பிடப்படுகின்றது. உலகின் 3.3 பில்லியன் உலகளாவிய பணியாளர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் தங்களின் வாழ்வாதாரத்தினை இழக்கும் அபாயத்தில் உள்ளனர் (world health organization, 2020). ஊரடங்கு காலத்தில் வருமானம் ஈட்ட வழியின்றி பலர் தங்களின் குடும்பங்களுக்கு உணவளிக்க முடியாமல் தவிக்கின்றனர். எல்லை மூடல்கள், வர்த்தக கட்டுப்பாடுகள் மற்றும் அடைப்பு நடவடிக்கைகள் என்பன காரணமாக விவசாயிகள் தங்களின் உற்பத்தி பொருட்களினை விற்பது, பயிர்களினை அறுவடை செய்வது, சந்தைக்கு அணுகுவதில் பல சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். இது சர்வதேச மட்டத்தில் உணவு வர்த்தக சங்கிலியினை பாதிப்படையச் செய்தது. இவ்வாறு பல சமூக தாக்கங்களினை கொவிட் - 19 ஏற்படுத்தியுள்ளது (world health organization, 2020).

இலங்கையினை ஆய்வு செய்யுமிடத்து, இலங்கையில் முதல் தொற்றாளர் 2020 ஜனவரி 27 ஆம் திகதி இனங்காணப்பட்டதுடன், முதல் இலங்கை நாட்டவர் 2020 மார்ச் 10 ஆம் திகதி அன்று கொவிட் 19 தொற்றாளராக இனங்காணப்பட்டார் (The word bank ,2020) .இலங்கையில் 2020 மார்ச் 11 வரை நோய்த் தொற்றுக்குள்ளானவர் தனியொருவராக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆயினும், அதன் பின்னர் இவ் எண்ணிக்கை 50 ஆக உயர்வடைந்து, 2020 ஏப்ரல் நடுப்பகுதியில் 7 மரணங்களும் 300 இற்கும் மேற்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இலங்கையினை பொறுத்தவரையில் 31.08.2020 இன் அரச தரவின் படி, 2995 பேர் கொவிட் - 19 தொற்றினால் பாதிக்கப்பட்டதோடு, அதில் 2860 மக்கள் குணமடைந்துள்ளனர். 12 பேர் உயிரிழந்துள்ளனர் (கூர்மை, 2020).

இந்த கொவிட் - 19 காரணமாக துறைவாரியாக இலங்கையானது பல சவால்களை முகம் கொடுத்துள்ளது. முகம் கொடுத்துக்கொண்டும் இருக்கின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கூற்றுப்படி, இலங்கை ஆண்டிற்கு 2.2% வளர்ச்சியினை எட்ட வேண்டும். இல்லையேல் பாரிய நெருக்கடியினை சந்திக்கும் என எதிர்வு கூறப்பட்டது. இருப்பினும் கொவிட் 19 காரணமாக 9% தேய்மானம் வருமானத்தில் ஏற்பட்டது (L.P.D.S.Pathirana, 2020). இதற்கு மேலதிகமாக இலங்கையானது பல சமூக ரீதியான சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளது. உதாரணமாக வறுமை, மக்களுக்கு இடையிலான தொடர்புகள் குறைவடைந்துள்ளமை, சமூக - பொருளாதார நிலையானது வீழ்ச்சிக் கண்டுள்ளமை போன்றவற்றினை கூறலாம் (Economic and social commission for Asia and the pacific, 2021).

ஆய்வுப் பிரதேசமாக காணப்படுகின்ற நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள சென்மாகிரட் தோட்ட மக்கள் கொவிட் 19 காலப்பகுதியில் பல சமூக சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். இது தொடர்பில் எந்த விதமான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, இவ் ஆய்வின் முக்கியத்துவம் உணரப்பட்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. ஆய்வு பிரச்சினை

ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள மக்கள் கொவிட் 19 காலப்பகுதியில் பல சமூக ரீதியான சவால்களுக்கு முகம்கொடுத்துள்ளனர். பொதுவாக கொவிட் 19 காலப்பகுதியில் மக்கள் முகம் கொண்ட சமூக ரீதியான சவால்கள் தொடர்பில் ஆய்வுக்குரல் (2020),கூர்மை (2021) Covid -19 social –economic impact on sri lanka (2020), A sociology of the covid -19 pandemic : A commentary and research agenda for sociologists (2020) போன்ற பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன. இருப்பினும், தேயிலைத் தோட்ட மக்களினை மையப்படுத்திய நிலையிலும், அதே சமயம் குறித்த ஆய்வு பிரதேசத்தினை மையப்படுத்திய நிலையிலும் எவ்விதமான ஆய்வும் இதுவரை வெளியிடப்படவில்லை. இதனால், தேயிலைத் தோட்ட மக்கள் எவ்வகையான சவால்களினை முகம் கொடுத்துள்ளனர் என்பதனை அடையாளம் காண்பதென்பது கடினமான செயன்முறையாகவே அமைந்துள்ளது. இதன் காரணமாக தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு இது வரையிலும் தீர்வு எட்டப்படாத நிலையிலேயே உள்ளது. இது இவ் ஆய்வின் மிகப்பாரிய பிரச்சினையாகும். இப் பிரச்சினையினை மையப்படுத்தியே இவ் ஆய்வானது வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், கொவிட் - 19 காலப்பகுதியில் இலங்கை எதிர்கொண்ட சமூக ரீதியான சவால்கள் என்னும் போது மொத்தமாக இலங்கை நாட்டினை மையப்படுத்திய நிலையில் ஆராய்வதென்பது கடினமான செயற்பாடாகும். அதன் காரணமாகவே மாதிரி என்ற அடிப்படையில் மத்திய மலைநாட்டில் அமைந்துள்ள சென்மாகிரட் தோட்டமானது தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## 3. ஆய்வு நோக்கம்

இவ்வாய்வானது இதன் இலக்கை அடைவதற்காக பின்வரும் நோக்கத்தினை முன்வைக்கின்றது.

**பிரதான நோக்கம்**

கொவிட் - 19 காலப்பகுதியில் சென்மாகிரட் தோட்டத்தினைச் சேர்ந்த மக்கள் எவ்வாறான சமூக ரீதியான சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் என்பதனை அடையாளம் காண்பதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 4. ஆய்வுப் பிரதேசம்

தெரிவு செய்யப்பட்ட ஆய்வு பிரதேசமான சென்மாகிரட் தோட்டமானது பிரதேச செயலகம் வலப்பனை, மாவட்டம் இல 6 நுவரெலியாவில் அமைந்துள்ளது. இப் பகுதியானது ஆரம்ப காலப்பகுதியில் பகலவத்தை என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டது. பின்னர் இப் பெயரானது சென்மாகிரட் தோட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதன் ஒரு பகுதியாகவே உடப்புஸ்ஸல்லாவ நகரம் காணப்படுகின்றது.

தெரிவு செய்யப்பட்ட ஆய்வு பிரதேசத்தில் மொத்தமாக 1189 குடும்பங்கள் காணப்படுகின்றன. இக் குடும்பங்களில் 2487 பெண்களும் 2444 ஆண்களும் வாழ்கின்றனர். இவர்களை மத அடிப்படையில் பாகுபடுத்தி நோக்க முடியும். அந்தவகையில் 660 சிங்களவர்களும், 4255 தமிழ் மக்களும், 19 முஸ்லிம் மக்களும் இவ் ஆய்வு பிரதேசத்தில் வாழ்கின்றனர் (மூலம் கிராம சேவகர் அறிக்கை, 2021).


*ISBN: 978-624-5736-37-9* *15th December 2022, Faculty of Arts &*

### 5. ஆய்வு முறையியல்

ஆய்வின் நோக்கத்தை அடைந்து கொள்ளும் முகமாக மாதிரி அலகுகளைத் தெரிவு செய்யும் முறைமை இவ்வாய்வில் பின்பற்றப்பட்டுள்ளது. இதற்காக நோக்கமாதிரி (Purposing Sampling) ஆய்வுக்கான மாதிரியைத் தெரிவுசெய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே ஆய்வு மாதிரி தெரிவு செய்யப்பட்டுள்ளது. சென்மாகிரட் தோட்டத்தில் மொத்தமாக 1189 குடும்பங்களினைச் சேர்ந்தவர்கள் வாழ்கின்றனர். இதில் 1085 குடுங்கள் பிரதான குடும்பங்களாகவும், 104 குடும்பங்கள் துணை குடும்பங்களாகவும் பாகுபடுத்திக் காட்ட முடியும். இக் குடும்பங்களில் வாழ்பவர்கள் பல வகையான தொழில்களில் ஈடுபடுகின்றனர். அந்தவகையில் 49 பேர் அரச துறையில் பணியாற்றுகின்றனர். 1848 பேர் தனியார் துறையில் பணியாற்றுகின்றனர். 03 பேர் அரைகுறை அரச துறையில் பணியாற்றுகின்றனர். 09 பேர் சுய தொழிலில் ஈடுபடுகின்றனர். 25 பேர் விலங்கு வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். 200 நபர்கள் வேளாண்மை தொழிலில் ஈடுபடுகின்றனர். இவர்களில் தனியார் துறையினைச் சேர்ந்தவர்கள் ஆய்வு மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரையுமே ஆய்வு மாதிரிகளாக தெரிவு செய்ய முடியாமையின் காரணமாக 60 பேர் நோக்க மாதிரின் மூலமாக தரவு சேகரிப்பு மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதே சமயம் இவ் ஆய்வு பகுதியினைச் சேர்ந்தவர்களில் அநேகமானவர்கள் தனியார் துறையில் பணிபுரிபவர்களாக காணப்படுகின்றனர். ஆகையால், பெரும்பாண்மை மக்களை மையப்படுத்தியதாக இவ் ஆய்வானது அமைய வேண்டும் என்பதற்காகவே தனியார் துறையினை சேர்ந்தவர்கள் மாதிரியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 20 நபர்கள் ஆழ்ந்த நேர்காணலுக்கும் 40 நபர்கள் இலக்குக் குழு கலந்துரையாடல்களுக்கும் உட்படுத்தப்பட்டு, தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை: 5.1.1. பிரதான தகவலாளிகளின் விபரம்**

| | **பிரதான தகவலாளிகள்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 01. | கிராம சேவகர் | 01 |
| 02. | தோட்டத் தொழிலாளர்கள் | 35 |
| 03. | விவசாயிகள் | 14 |
| 4. | வாகன ஓட்டுநர்கள் | 10 |
| 5. | கூலித் தொழில் செய்பவர்கள் | 10 |

### 5.1. தரவு சேகரிப்பு நுட்பங்கள்

இவ் ஆய்வில் பண்புசார் ஆய்வாக அமையப் பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் முதலாம் நிலைத்தரவு மற்றும் இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பு முறைகளினூடாக இவ் ஆய்வுக்கான தரவுகள் பெறப்பட்டன. முதலாம் நிலைத்தரவு சேகரிப்புக்காக அறுபது நபர்கள் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டு, 20 நபர்கள் ஆழ்ந்த நேர்காணல்களுக்கும், 40 நபர்கள் இலக்குழு கலந்துரையாடல்களுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு, தெரிவு செய்யப்பட்ட ஆய்வு மாதிரிகள் எவ்வாறான சமூக சவால்களினை எதிர்கொண்டுள்ளனர் என்பதனை அறியும் முகமாக அவதானம் சார் நுட்பமும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள் பிரதான தகவல் சேகரிப்பு நுட்பமாக பயன்படுத்தப்பட்டது ஆழ்ந்த நேர்காணல் நுட்பமுறையாகும். இந்த நுட்ப முறை மூலமாக தகவல் சேகரிப்பதற்காக ஆய்வு பிரதேசத்திற்கு நேரடியாக சென்று, ஆழ்ந்த நேர்காணல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்தோடு, ஆய்வுக்குத் தேவையான இரண்டாம் நிலைத்தரவுகளாக வலப்பனை பிரதேச செயலகத்தின் ஆண்டறிக்கை, புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இணையத்தள தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டன. மேலும், இவ்வாய்வானது பண்புசார் தரவுகள் எண்ணக்கருப் பகுப்பாய்வு முறை

(Quantitative – Content Analysis) என்பவற்றினூடாக அனைத்துவகையான தரவுகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆழமான கலந்துரையாடல் மூலம், அவர்களின் வாழ்க்கை அனுபவங்களை மிகவும் விரிவாகவும், தெளிவாகவும் ஆராயப்பட்டன. அதற்கமையாவாக தகவலாளிகள் மிகவும் பூரணமாகவும், சுதந்திரமாகவும் அவர்களின் தகவல்களை வழங்கினார்கள். மேற்படி சேகரிக்கப்பட்ட தரவுகள் பண்பு சார் தரவுகள் ஆகும். அதன் காரணமாக இத் தரவுகள் எண்ணக்கரு பகுப்பாய்வு முறையினூடாக (Quantitative –content) பகுப்பாய்வு செய்யப்பட்டன.

## 6. தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

கொவிட்-19 காலப்பகுதியில் ஆய்வுப் பிரதேசத்தினை சேர்ந்த மக்கள் பல்வேறுவகையான சமூக சவால்களுக்கு முகம்கொடுத்துள்ளனர் என ஆய்வு கண்டறிந்துள்ளது. அதனை பின்வருமாறு இவ் ஆய்வு கலந்துரையாடுகின்றது.

### 6.1 தொழில் இழக்கப்பட்டமை.

சென்மாகிரட் தோட்டத்தினைப் பொருத்தமட்டில் பல வகையான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் வாழ்கின்றனர். இவர்கள் கொவிட் 19 காலப்பகுதியில் தங்களின் வேலைகளினை இழந்தனர். குறிப்பாக தோட்ட தொழிலாளர்கள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் கூலித் தொழிலாளர்கள் முழு நேரமாக தங்களின் வேலைகளினை இழக்க வேண்டிய சூழ்நிலை மலர்ந்தது. இதற்கான காரணம் கொவிட் 19 காலப்பகுதியில் காலவரையறையின்றி போடப்பட்ட ஊரடங்கு உத்தரவாகும். மேலும், கொவிட் 19 வைரஸின் மீது காணப்பட்ட பயமும் தொழில் இழக்கப்பட்டமை மிகப் பிரதான காரணமாகும்.

இது தொடர்பில் தோட்டத் தொழிலாளர் ஒருவர் கூறுகையில்,

*“ கொவிட் 19 காலப்பகுதியில் தொழிலுக்கு செல்ல முடியவில்லை. இதனால் குடும்ப வருமானம் போதாமையினால் நாங்கள் பாரிய கடன் சுமைக்கு ஆளாகினோம் என்றார்”* (இலக்குக் குழு கலந்துரையாடல் - 01, 2021).

கொவிட் 19 காலப்பகுதியில் குறித்த ஆய்வுப் பகுதியில் வேலை இழக்கப்பட்டமையினையும் இதன் விளைவினையும் இக் கூற்றின் மூலமாக வெளிப்படையாகவே அறிந்துக் கொள்ள முடியும்.

இது தொடர்பில் ருகுணு பல்கலைக்கழகத்தின் மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் பீடத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில், பொருளாதார நடத்தைகளில் கொவிட் 19 ஆனது எவ்வாறான மாற்றங்களினைக் கொண்டுவந்துள்ளது என்பது பற்றி தொழிலாளர்களுக்கு இடையிலான உறவு, புதிய வேலைகளினை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள், சுகாதார மற்றும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள், வேலை வாய்ப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்ற பிரிவுகளினை மையமாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

Alemayehu geda (2020) கொவிட் - 19 காலப்பகுதியில் ஊடரங்கு சட்டம் விதிக்கப்பட்டமையினால் நகர மக்களின் வேலை இழப்பு எந்த அளவிற்கு அதிகரித்ததுள்ளது தொடர்பில் பேசுகின்றார்.

எனவே, கொவிட் 19 ஆனது சமூக ரீதியாக வேலை இழக்கப்பட்டமை தொடர்பில் தாக்கத்தினை செலுத்தியுள்ளது. இதனை மேற் காட்டப்பட்டுள்ள ஆதாரங்களின் மூலமாக தெளிவாக அறியலாம்.

**6.2 சமய நிகழ்வுகள் பாதிப்படைந்தமை.**

மத அடிப்படையில் இக் கிராமத்தின் சனத்தொகையினை பார்க்கும்போது, 648 பௌத்த மக்களும், 3975 இந்து மக்களும், 292 கிறிஸ்தவ மக்களும், 16 இஸ்லாம் மதத்தினைச் சேர்ந்த மக்களும் வாழ்ந்து வருகின்றனர் (கிராம சேவகர் அறிக்கை, 2021). இவர்களில் ஆய்வு மாதிரிகளாக நான்கு மத அடிப்படையிலும் சரிசமான எண்ணிக்கையானவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதனை அடிப்படையாகக் கொண்டே ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் மதம் அடிப்படையில் பிரிந்துக் கிடப்பவர்களாக காணப்பட்ட போதிலும் இவர்கள் அனைவரினையுமே ஒன்றிணைக்கும் அம்சமாக காணப்படுவது கோவில் திருவிழாக்கள். பொதுவாக இந்த கிராம மக்கள் கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், டலோஸ் முத்துமாரியம்மன் ஆலயம் போன்ற ஆலங்களில் நடைபெறும் திருவிழாக்களில் பங்குகொள்வார்கள். இது சமூக தொடர்புகளினை அதிகரிப்பதற்கு ஒரு கருவியாக தொழிற்பட்டது. இருந்த போதிலும் கொவிட் - 19 காலப்பகுதியில் பொதுவாக சமய நிகழ்வுகள் அனைத்தும் தடை செய்யப்பட்டன.

ஆய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் பார்க்கும் போது, ஆய்வு பிரதேசத்தில் அதிகமாக இந்து மக்களே சமயம் சார் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இவர்களின் வாழ்வியல் பல சடங்குகளினையும் சம்பிரதாயங்களினையும் உள்ளடக்கியதாகவே அமையப்பெறுகின்றது. உதாரணமாக திருமணச் சடங்கு, இறுதிக் கிரியை, காது குத்தும் வைபவம், பூப்புனித நீராட்டு விழா. இவ்வாறான நிகழ்வுகளின் போது உறவுகளின் வருகை மிகையாகக் காணப்படும். ஆனால், கொவிட் 19 காலப்பகுதியில் பல புனித நிகழ்வுகளுக்கு அரசு தடைவிதித்தது. அதேசமயம் எத்தனை நபர்கள் நிகழ்வுகளில் பங்கு கொள்ள வேண்டும் என்பதில் வரையறையும் விதிக்கப்பட்டது. இதனால், உறவுகளிடத்தில் தொடர்பற்ற நிலை மலர்ந்தது. அது தொடர்பில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் ஒருவரிடத்தில் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலில்,

> *''எனது தந்தை உடல் நல குறைவின் காரணமாக இறந்தார். கொவிட் 19 காலப்பகுதியில் இறந்தமையினால் எனது வீட்டிற்கு அவரின் உடலினைக் கொண்டு வர முடியவில்லை. வைத்தியசாலையில் வைத்து எனது தந்தையின் உடல் எரிக்கப்பட்டது. இந்த இறுதி நிகழ்வில் என் தாய் மாத்திரம் பங்குகொண்டார்.நானும் எனது தங்கையும் இறுதியாகக் கூட என் தந்தையின் முகத்தினை பார்க்க முடியவில்லை. எனது உறவுகளுக்கும் இது தொடர்பில் கூற முடியவில்லை என்றார்.''* (நேர்காணல்- 03, 2021)

இக் கூற்றிலிருந்து நேரடியாகவே கொவிட் 19 காரணமாக எந்த அளவிற்கு சமயம் சார் நிகழ்வுகள் பாதிப்படைந்துள்ளது என்பதனை வெளிப்படையாகவே அறிந்துக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

இது தொடர்பில் ருகுணு பல்கலைக்கழகத்தின் மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் பீடம் வெளியிட்ட அறிக்கையில், கொவிட் 19 தொற்றானது கலாசாரம் மற்றும் சமய ரீதியாக நடவடிக்கைகளில் எத்தகைய பாதிப்புக்களினை ஏற்படுத்தியுள்ளது என்பது தொடர்பில் பேசப்படுகின்றது. அந்தவகையில், சமய நடைமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், சமயம் மற்றும் தார்மீக மதிப்புக்களில் ஏற்பட்ட மாற்றம், சமயம் மற்றும் இயற்கைத் தொடர்புகளுக்கான மாற்றம், மத சடங்குகளில் ஏற்பட்ட மாற்றம் போன்ற தலைப்புகளின் ஊடாக இவ் அறிக்கையில் தெளிவாக ஆராயப்பட்டுள்ளது.

பால்.ஆர்.வார்டு (2020) வெளியிட்ட ஆய்வறிக்கையொன்றில், மக்களுக்கு இடையிலான தொடர்புகள் எவ்வாறு கொவிட் 19 காலப்பகுதியில் குறைவடைந்தது என்பது தொடர்பில் பேசியுள்ளார்.

ஆய்வுக்குரலில், (2022) ஜனாசா எரிப்பு தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அந்தவகையில் அதில் மதக் கடமைகள் தொடர்பிலும் ,இலங்கையில் ஜனாசா எரிப்பு தொடர்பான கண்ணோட்டம் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

எனவே, இவ் ஆய்வின் மூலமாக கொவிட் - 19 ஆனது இவ் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மக்களின் சமய ரீதியான செயற்பாடுகளில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு ஆதாரமான சான்றுகளாகவே சில ஆய்வுகளும் வெளிவந்துள்ளன என்பதனை அறிந்துக் கொள்ள முடியும்.

**6.3. மக்களுக்கான தேவைகள் நிறைவேற்றப்படாமை.**

கொவிட் - 19 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட செயற்திட்டங்கள் பொதுவாக இந்த மக்களுக்கு போதுமான வகையில் பெற்றுக்கொள்ளப்படவில்லை. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 60 சதவீமான மக்கள் பாமர மக்களே அவர்களுக்கு கொவிட் - 19 காலப்பகுதியில் எவ்வாறு நடந்துக்கொள்ள வேண்டும்?, கொவிட் 19 என்பது யாது?, கொவிட் - 19 இனால் ஏற்படும் பாதிப்புக்கள் யாவை?, கொவிட் - 19 பாதிப்பிலிருந்து விலகியிருக்க எவ்வாறான நடைமுறைகளினை பின்பற்றுதல் வேண்டும்? என்பது தொடர்பில் போதுமான அறிவு காணப்படவில்லை. இருப்பினும் இக் கிராமப்பகுதியில் பொது நிறுவனங்களின் மூலமாகவோ பொலிஸ் நிறுவனத்தின் மூலமாகவோ எந்தவித விழிப்புணர்வு பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை.

உடப்புஸ்ஸல்லாவ நகரினை மையப்படுத்திய நிலையில் மாத்திரமே விழிப்புணர்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், கொவிட் - 19 காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவு திட்டமும், உணவுப் பொதிகள் வழங்கும் திட்டமும் நாடளாவிய ரீதியாக மேற்கொள்ளப்பட்டது. ஆய்விற்கு உள்வாங்கப்பட்டவர்களில் 20 சதவீத மக்கள் மாத்திரமே இச் சலுகையினை நுகர்ந்தனர். இது தொடர்பில் கிராம சேவகரிடம் கேட்டபோது பொருத்தமான பதிலினை அவர் வழங்கவில்லை. அது மட்டுமல்லாது இந்த கிராமத்தினை பொருத்தமட்டில் 5 குடும்பங்கள் கொவிட் - 19 காலப்பகுதியில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுக் காணப்பட்டன. இவர்களுக்கு போதுமான நிவாரணப் பொருட்கள் கொடுக்கப்படவில்லை. இது தொடர்பில் தோட்டத் தொழிலாளி ஒருவர் கூறுகையில்,

*''எங்கள் குடும்பத்தினை இரண்டு வாரங்கள் தனிமைப்படுத்தலில் வைத்திருந்தார்கள். அதற்கு நிவாரணப் பொருட்கள் கிடைக்குமென அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், எங்கள் குடும்பத்திற்கு அவ்வாறான உதவிகள் கிடைக்கவில்லை. என் வீட்டினை சுற்றியிருந்த சுற்றத்தார்களும் எனது மகளின் குடும்பத்தினருமே உதவிகளினை செய்தனர் என்றார்.''*

(நேர்காணல் - 04, 2021)

இக் கூற்றின் மூலமாக கொவிட் - 19 தொற்றுக்குள்ளானவர்களுக்கு கிடைக்கும் நிவாரணப் பொருட்கள் கூட இவ் ஆய்வு பகுதிக்கு உட்பட்டுள்ள மக்களுக்கு கிடைக்கப் பெறவில்லை என்பதனை அறிந்துக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைகழத்தின் (2021) ஆய்வறிக்கையொன்றில், இலங்கை வாழும் மக்களானவர்கள் கொவிட் - 19 காலப்பகுதியில் தங்களுடைய தேவைகளினை நிறைவேற்றிக் கொள்வதில் என்னென்ன சவால்களினை எதிர் கொண்டுள்ளனர் என்பது தொடர்பாக கூறப்பட்டுள்ளது.

மேலும், மாட்டியா மார்சி, பெடரிகாக மரியா மகாரிணி, லூசி டெருலுயன் (2022) மூவரும் இணைந்து வெளியிட்ட ஆய்வறிக்கையில், கொவிட் 19 காலப்பகுதியில் மக்களானவர்கள் தங்களின் தேவைகளினை

பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களினை எதிர் கொண்டார்கள். அதனால், அவர்கள் பல பொது சுகாதார பிரச்சினைகளுக்கும், உளவியல் தொடர்பான பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டது என்கின்றார்கள்.

எனவே, இவ் ஆதாரங்களின் மூலமாக கொவிட் - 19 காலப்பகுதியில் மக்கள் தங்களின் தேவைகளினை நிறைவேற்றிக் கொள்வதில் பாரிய சிரமங்களினை எதிர்கொண்டுள்ளனர் என்பதனை தெளிவாகவே அறிந்துக் கொள்ள முடியும்.

**6.3. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைந்தமை.**

கொவிட் - 19 காலப்பகுதியில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், கல்வியற் கல்லூரிகள் காலவரையறையின்றி மூடப்பட்டன. இதன் காரணமாக கல்வியில் பல பாதிப்புக்கள் ஏற்பட்டன. அந்தவகையில் இக் கிராமத்தில் கொவிட் - 19 காரணமாக கல்வி நடவடிக்கைகளில் பாதிப்புக்களினை சந்தித்த மாணவர்களின் விபரங்கள் பின்வருமாறு,

**7.7.1. அட்டவணை கொவிட் 19 காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மட்டம் மற்றும் சதவீதம்**

| கல்வி மட்டம் | கொவிட் - 19 இனால் பாதித்த மாணவர்களின் சதவீதம் |
|---|---|
| ஆரம்ப பாடசாலை மாணவர்கள் | 10 |
| 6 தரம் - 11தரம் வரையான வகுப்பு மாணவர்கள் | 50 |
| உயர்தர மாணவரகள் | 30 |
| பல்கலைக்கழக மாணவர்கள் | 5 |
| கல்வியற் கல்லூரி மாணவர்கள் | 5 |

**(மூலம்: முதலாம் நிலை களஆய்வு, 2021)**

மேற் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அட்டவணையானது, ஆய்வு பிரதேசத்தில் கொவிட் - 19 காரணமாக கல்வி நடவடிக்கைகளில் பாதிப்புக்களினை முகம்கொடுத்த மாணவர்கள் மற்றும் அவர்களின் சதவீதத்தினை விளக்குவதாக அமைந்துள்ளது. அந்தவகையில் ஆய்வுப்பிரதேசத்தில் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் 10 சதவீதமானவர்களும், 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்கள் 50 சதவீதமானவர்களும், உயர்தர மாணவர்கள் 30 சதவீதமானவர்களும், பல்கலைக்கழக மாணவர்கள் 5 சதவீதமானவர்களும், கல்வியற் கல்லூரி மாணவர்கள் 5 சதவீதமானவர்களும் கொவிட் 19 காரணமாக தங்களின் கல்வி நடவடிக்கைகளினை சீராக தொடர முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தடைட்யினை நிவர்த்தி செய்யும் விதமாக பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் இணையம் வழியாக முன்னெடுக்கப்பட்டன. இருப்பினும், அவை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவில்லை. குறிப்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் கிழக்கு பல்கழைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தொடர்ச்சியான கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. இதனால், பருவ காலங்கள் தள்ளிப் போனமையானது மாணவர்களின் பல்கலைக்கழக வாழ்க்கையினை நீடிக்க

காரணமாயிற்று.. இது மாணவர்கள் மத்தியில் கல்வி தொடர்பில் சலிப்பினையும், தொழிலுக்கான கால தாமதத்தினையும் உண்டாக்கியது.

பாடசாலைகளினை பார்க்கும் போது, உயர்தர மாணவர்கள், கா. பொ. தர சாதாரண பரீட்சை எழுதப்போகும் மாணவர்கள், புலமைப்பரீட்சையினை எழுதவுள்ள மாணவர்களுக்கு மாத்திரமே இணையம் வழியாக கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஏனைய மாணவர்கள் கல்வினையே மறந்து போகும் நிலை மலர்ந்தது. அது மாத்திரமன்றி பாலர் பாடசாலைக்கு குழந்தைகளினை சேர்க்க முடியாத நிலை ஏற்பட்டமையின் காரணமாக அவர்களின் எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாகவும் காரணமாக ஆகியது என்பதை ஆய்வு முன்வைக்கின்றது.

இது தொடர்பில் கூர்மை (2021) என்ற சஞ்சிகையில் ஆராயப்பட்டுள்ளது. இந்த சஞ்சிகையில் கொவிட் 19 மற்றும் சமூகத்தாக்கம் என்ற பிரிவில், கொவிட் 19 இனால் எந்த அளவிற்கு கல்வி நிலை பாதிப்படைந்துள்ளது என்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

ஆய்வுக்குரல், (2020) கொவிட் 19 தொற்றுக் காலப்பகுதியில் மாணவர்களின் கல்வி எத்தகைய நிலைப்பாட்டில் காணப்பட்டது, கொவிட் 19 காலப்பகுதியில் அறிமுகம் செய்யப்பட்ட இணையக்கல்வியினால் மாணவர்கள் எவ்வாறான பிரச்சினைகளினை சந்தித்தார்கள் என்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக முஸ்லிம் மாணவர்கள் இணையவழிக் கல்வியினால் எதிர்நோக்கிய சவால்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

ஒழுகன்வந்தே சந்தாசிறி (2020) என்பவர், அனைவருக்குமே கல்வியினை பெற்றுக்கொள்வதற்கான உரிமை காணப்படுகின்றது. (Joel Spring: 2000) ஆனால், கொவிட் 19 காலப்பகுதியில் மாணவர்கள் அவ் உரிமையினை இழந்தார்கள் எனக் கூறியுள்ளார். மேலும், கல்வியில் திடீரென ஏற்பட்ட மாற்றங்கள் மாணவர்களினை உளவியல் சார் நெருக்கடிக்கு ஆளாக்கியது என்றும் கூறியுள்ளார்.

கிரஹாம், ஹென்றி மற்றும் கோபன்ஸ் (2017) போன்றோர் கற்றல் தொடர்பான கோட்பாடுகள் தொடர்பில் விரிவான விளக்கங்களினை கோட்பாடுகளின் மூலமாக கூறியுள்ளனர். இவர்கள் Online Collaborative Learning (OCL) என்ற பகுதியில் இணையவழிக் கற்கை தொடர்பில் தெளிவான விளக்கம் கொடுத்துள்ளனர். இதனூடாக இணையவழிக் கல்வி என்றால் என்ன என்பது தொடர்பாக தெளிவான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் விளக்கங்கங்கள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் கொவிட் 19 காலப்பகுதியில் மாணவர்கள் கல்வியல் சார் செயற்பாடுகளில் பல வகையான சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் என்பதனை அறியலாம்.

**முதியோர்களின் வாழ்வியல் பாதிப்படைந்தமை.**

இவ் ஆய்வுக்கு தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளில் 10 நபர்கள் முதியவர்களாவர். இவர்கள் பொதுவாக குடும்பங்களின் ஒத்துழைப்பு இன்றி உழைத்து உண்ணுபவர்களாகவே உள்ளனர். கொவிட் 19 காலப்பகுதியில் காலவரையறையின்றி இடப்பட்ட ஊரடங்கு உத்தரவானது இவர்களின் வாழ்வில் சவாலான ஒன்றாகவே விளங்கியது. அந்தவகையில் கொவிட் 19 காலப்பகுதியில் கூலித் தொழில்களுக்கும், கொழுந்து பறிக்கும் தொழிலுக்கும் செல்லக் கூடிய வாய்ப்பு இவர்களுக்கு கிடைக்கவில்லை. அதன் காரணமாக ஒரு வேளை உணவிற்கே வழி இன்றி தவித்தனர். இதன்

காரணமாக குடும்ப அங்கத்தவர்களின் உதவியினை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால், குடும்ப உறுப்பினர்களின் ஒதுக்கல்களுக்கும், தன்மான பிரச்சினைகளுக்கும் முதியவர்கள் முகம்கொடுத்தனர்.

இக் கிராமத்தினைப் பொருத்தவரையில் கொவிட் 19 ஆனது அதிகளவு முதியவர்களினையே பாதிக்கும் என்ற மனப்பாங்கும் முதியர்கள் வாழ்க்கையினை வாழ்ந்து முடித்துவிட்டார்கள் என்ற மனப்பாங்கும் காணப்பட்டமையின் காரணமாக அவர்களுக்கான பராமரிப்பு என்பது ஏனைய வயது கட்டமைப்பினரைப் போன்று சரிசமனானதாக வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் (2022) சபையானது கூறும்போது, வயதானவர்கள் குறிப்பாக உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள், இருதய நோய் மற்றும் நீரிழிவு நோய் உள்ளவர்கள் கொவிட் 19 தொற்றின் மூலமாக அதிகளவு பாதிக்கப்படுகின்றனர். இதன் காரணமாக அதிக உடல் நல அபாயங்களுடன் போராடுவது மட்டுமல்லாது தனிமையில் தங்களை ஆதரிக்கும் திறன் குறைந்தவர்களாகவும் அமைகின்றனர். என பல வகையில் முதியவர்கள் கொவிட் 19 காரணமாக பாதிக்கப்பட்ட நிலையினை விளக்குகின்றது.

அமெரிக்க உளவியல் சங்கம் (2021) கொவிட் 19 தொற்றின் காரணமாக முதியோர்கள் எத்தகைய சவால்களினை முகம் கொடுத்துள்ளனர் என்பது தொடர்பில் பேசுகின்றது.

எனவே, மேற் காட்டப்பட்டுள்ள ஆதாரங்களில் இருந்து முதியவர்கள் கொவிட் 19 காலப்பகுதியில் சமூக மட்டத்தில் பல வகையான சவால்களினை எதிர்கொண்டுள்ளனர் என்பதனை அறியலாம். இது ஆய்வு பிரதேச முதியோர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் தொடர்பில் ஒரு ஆதாரமாகவே அமைந்துள்ளது.

**பெண்களின் வாழ்வியல் பாதிப்படைந்தமை.**

கொவிட் - 19 காரணமாக பெண்கள் தங்களின் வாழ்வியல் சார் பொருளாதார நடவடிக்கைகளினை இழந்தனர். குறிப்பாக தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறிக்கும் பெண்கள், கூழித் தொழில்களில் வேலை செய்யும் பெண்கள் தங்களின் தொழிலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. காரணம் கொவிட் 19 தொற்றின் போது போடப்பட்ட ஊரடங்குச் சட்டமாகும்.

தொழிலுக்கு செல்லமுடியாமையின் காரணமாக அவர்களின் குடும்ப சுமை அதிகரித்தது. மேலும், குடும்ப உறுப்பினர்களும் ஊரடங்கு காலப்பகுதியில் வெளியில் செல்ல முடியாமையின் காரணமாக வீட்டிலேயே தங்கினர். இதனால், பெண்களுக்கான வீட்டு வேலைகள் இருமடங்குகளாக அதிகரித்தன. இதன் காரணமாக அவர்களது ஓய்வு நேரமும் குறைய ஆரம்பித்தது. இது தொடர்பில் ஒரு தாய் ஒருவர் கூறுகையில்,

‘‘எனது வீட்டின் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை எட்டாகும். கொவிட் 19 ஊரடங்கின் காரணமாக எனது குடும்ப உறுப்பினர்கள் வெளியில் செல்ல முடியாமல் வீட்டிலேயே தங்கினர். இதனால், எனது அன்றாட வேலைகள் பல மடங்குகளாக அதிகரித்தன. அவர்களுக்கான பணிவிடைகளினை புரிவதற்கே நான் அதிகமான நேரத்தினை ஒதுக்கினேன்’’

இக் கூற்றிலிருந்து கொவிட் - 19 ஆனது எவ்வாறாக குடும்ப பெண்களின் வாழ்வியலினை பாதித்துள்ளது என்பதனை வெளிப்படையாகவே அறிந்துக் கொள்ள முடியும்.

பொதுவாக இக்காலப்பகுதியில் பெண்களுக்கு குடும்ப அங்கத்தவர்களின் மூலமாக பாலியல் தொந்தரவுகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

அவெந்தி கலன்சூர்யா (2020) கூறுகையில், இலங்கையில் கொவிட் 19 ஊரடங்கானது தொழிலுக்கு செல்லும் பெண்களுக்கு தடையாக அமைந்தது என்றும், வருமானம் ஈட்டுவதில் பல வகையான பிரச்சினைகளினை ஏற்படுத்தியது என்றும் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் (2020) வெளியிட்ட அறிக்கையில், பெண்கள் கொவிட் 19 காலப்பகுதியில் எத்தகைய குடும்ப ரீதியான சவால்களினை முகம் கொடுத்துள்ளனர் என்பது தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

எனவே, கொவிட் 19 காலப்பகுதியில் பெண்கள் பல சவால்களினை எதிர்கொண்டுள்ளனர் என்பதனை ஏற்றுக்கொள்ளவே வேண்டும். அதற்கு ஆதாரங்களாகவே மேல் காட்டப்பட்டுள்ளவை அமைகின்றன.

**முடிவுரை**

கொவிட் 19 காலப்பகுதியில் உலகளவில் மக்களானவர்கள் பல வகையான சமூக ரீதியான சவால்களினை முகம் கொடுத்துள்ளனர். அந்த வகையில் தெரிவு செய்யப்பட்ட ஆய்வு பிரதேச மக்களும் பல வகையான சமூக ரீதியான சவால்களுக்கு முகம்கொடுத்துள்ளனர். இதற்கு உதாரணங்களாக : வேலைகள் இழக்கப்பட்டமை, சமய ரீதியான நிகழ்வுகள் பாதிப்படைந்தமை, பாரபட்சங்கள் தோன்றியமை, கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைந்தமை, முதியோர்களின் வாழ்வியல் பாதிப்படைந்தமை, பெண்களின் வாழ்வியல் பாதிப்படைந்துள்ளமை போன்றவற்றினை அடையாளப்படுத்தலாம்.

எதிர்காலத்தில் இவ்வாறான ஆய்வுகள், குறித்த ஆய்வுப் பிதேசத்தில் விரிவாக்கப்பட்டு, வெவ்வேறான மாதிரிகள் மற்றும் எண்ணக்கருக்கள் கொண்டு வேறுபட்ட வகையில் ஆராயப்பட வேண்டும் என எதிர்கால ஆய்விற்கு முன்மொழியப்படுகின்றது. மேலும், அரசாங்கம் முன்னெடுக்கும் சமூகம் சார் செயற்திட்டங்கள் இப் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையும்.

## References


Aaron kleln, & ember Smith. (2021). Explaining the economic impact of covid 19: core industries and the Hispanic workforce. https://www.brookings.edu/research/explaining-the-economic-impact-of-covid-19-core-industries-and-the-hispanic-workforce/

American psychological association. (2021). Ageism and covid 19.

Avanthi kalansooriya. (2020). Gender and covid 19 in Sri Lanaka. Gendered impact of covid 19 outbreak –from a Sri Lankan perspective.

Faculty of humanities and social science. (2020). Covid 19 socio economic impact on Sri Lanka part –II: The social impact of th covid 19pandemic in sri lanka, Matara: University of Ruhuna.

Mattia marchi. Federica Maria magarini. & llse derluyn. (2022).experience of discrimination during covid -19 pandemic: the impact of public health measures and psychological distress among refugees and other migrants in europe.942.

Olaganwantte chandasiri, (2020). The Covid -19: Impact on education. Vol, 6(2), 38-42

Paul ward, R. (2020). A sociology of the covid – 19 pandemic: A commentary and research agenda for sociologists. Vol, 56(4), 726-735. juurnals.sagepub.com/home/jos

Rameez, A., Fowsar, M.A.M., & lumna, N. (2020). Impact covid 19 on higher education sectors in Sri Lanaka a study based on south eastern university of Sri lanaka. South eastern university of Sri Lanka.Vol, 6. http://doi.org/10.36941/jesr-2020- 0132

South and south –west Asia office. (2021). Impact of the covid 19 pandemic on the SDGs in Sri Lanka and the potential for regional cooperation. (Economic and social Commuission for Asia and the pacific).

Sri Lanka child health. (2020). covid 19 pandemic and school education. 49(3), 207-209. http://dx.doi.org/10.4038/sIjch.v49i3.9135

The World Bank. (2021). Economic and poverty impact of covid – 19. (Word bank ministry of finance central bank of Sri Lanka).

UN WOMEN. (2020). Intensification of efforts to eliminate all forms of violence against women: Report of the secretary –General.

UNESCO. (2020). Education: From disruption to recovery.

UNICEF. (2020). Sri Lanka and the covid 19 crisis.

United Nations. (2021). Everyone Included: Social Impact of COVID-19. (Department of Economic and Social Affairs Social Inclusion)

University of Sri Jayewardenepure. (2020).How covid 19 patients are discriminated and stigmatize in Sri Lanka.

Valeria.S, Davide.A & Vincenzo.A. (2020). the Psychological and Social Impact of Covid-19: New Perspectives of Well-Being. Published by Iniversity of salemo,Fisciano,Italy.https://www.frontiersin.org/articles/10.3389/fpsyg.2020.577684/full

Vasantha, V., & Gnanachandran, G. (2021). குறைந்த வருமானம் பெறும் மக்கள் மீது கொவிட் -19 ஏற்படுத்திய தாக்கம் : வந்தாறுமூலை கிராமம் சார்ந்த சிறப்பு பார்வை. Kalam, 14 (3), 112-121.

இலங்கை மத்திய வங்கி. (2020). கொவிட் - 19 உம் இலங்கையும் : சவால்கள் கொள்கை பதிலிறுத்தல்கள் மற்றும் தோற்றப்பாடு.

உலக வங்கி .(2020). இலங்கையின் கொவிட் -19 பிரதிபலிப்பு: இன்று உயிர்களை பாதுகாப்போம் நாளைய நாளுக்காக தயாராகுவோம்.